# கொங்கு நாட்டு வணிகம்

1.கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?

வடக்கே பெரும்பாலை தெற்கே பழனி மலை, மேற்கே வெள்ளிமலை, கிழக்கே மதிற்கூரை என இந்தான்கு எல்லைக்கு உட்பட்ட பகுதியாகக் கொங்கு மண்டலம் விளங்கியதாகக் கொங்கு மண்டலச் சதகம் கூறுகிறது.

2.கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.

- கரூர் நகரத்திற்கு, "வஞ்சிமா நகரம்" என்ற பெயரும் உண்டு.
- கிரேக்க அறிஞர் தாலமி கரூரைத் தமிழகத்தின் முதன்மை உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டுள்ளார்.
- நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, கரும்பு போன்றவை இங்குப் பயிரிடப்படுகின்றன.
- கல்குவாரித் தொழிற்சாலைகள் இங்கு உள்ளன.
- கைத்தறி நெசவு ஆடைகளுக்குப் பெயர் பெற்ற மாவட்டமாகக் கரூர் விளங்ருகிறது.
- தோல் பதனிடுதல், சாயம் ஏற்றுதல், சிற்ப வேலைகள் போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன.
- பேருந்துக் கட்டுமானத் தொழிலின் சிகரமாகக் கரூர் விளங்குகிறது.

3.கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

உள்நாட்டு வணிகத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கி உள்ளனர்.

உள்நாட்டு வணிகம்:

சேர நாட்டில் உள்நாட்டு வணிகம் நன்கு வளர்ச்சியுற்று இருந்தது. மக்கள் தத்தம் பொருள்களைத் தந்து தமக்குத் தேவையான பொருளைப் பெற்றனர். நெல்லின் விலையைக் கணக்கிட உப்பே அடிப்படையாக இருந்தது என்பர். உப்பும் நெல்லும் ஒரே மதிப்புடையனவாக இருந்தன என்பதை அகநானூற்றின் பாடல் மூலம் அறியலாம்.

4.கொங்கு நாட்டின் வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

வெளிநாட்டு வணிகத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கி உள்ளனர். கடல் வணிகத்தில் சேர நாடு சிறப்புற்றிருந்தது.

வெளிநாட்டு வணிகம்:

முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களில் ஒன்றாக விளங்கியது. இங்கிருந்து தான் மற்ற நாடுகளுக்கு மிளகு, முத்து, யானை, தந்தங்கள், மணி

போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. பொன்மணிமிக்க புடவைகள், சித்திர வேலைப்பாடுகள் அமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன.

5.சேரர்களைப் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.

- மூவேந்தர்களில் பழமையானவர்கள் சேரர்கள்.-
- சேரர்களின் நாடு குடநாடு எனப்பட்டது. சேரர்களின் தலைநகரம் வஞ்சி.
- தொண்டி, முசிறி, காந்தளூர் ஆகியன சேரநாட்டின் துறைமுகப் பட்டினங்களாக விளங்கின. சேரர்களின் கொடி விற்கொடி ஆகும்.

6.நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் யாவை?

- தேயிலைத் தொழிற்சாலை.
- புகைப்படச் சுருள் தயாரிப்பு தொழிற்சாலை
- துப்பாக்கி வெடிமருந்து தொழிற்சாலை, தைல மர எண்ணெய் தொழிற்சாலை.

7.கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் யாவை?

- பஞ்சாலைகள் நூற்பாலைகள்
- மின்சாரப் பொருட்கள்
- எந்திரங்கள்
- வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியன கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறைந்துள்ளன.

8.ஈரோடு மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.

- தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரம் ஈரோடு.
- இங்கு நெல், நிலக்கடலை, மஞ்சள், கரும்பு, பருத்தி, எள் போன்றவை பயிரிடப்படுகின்றன.
- தமிழகத்திலேயே மஞ்சள் சந்தை உள்ள ஒரே மாவட்டம் ஈரோடு தான்.
- துணி நூற்பாலைகள், எணணெய் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் பெருமளவில் இங்கு உள்ளன. நூல் நூற்பு, துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல், அச்சிடுதல், தோல் பதனிடுதல் முதலான தொழில்களும் ஈரோடு மாவட்டத்தில் நடைபெறுகின்றன.